Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 100/2022**

**Deposition of PW.8 (LW.7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | அல்லிமுத்து | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | செவனக்கிரையான் பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 42 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் செவனக்கிரையான்பட்டியில் குடியிருந்துகொண்டு கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 15.06.2016 அன்று செவனக்கிரையான்பட்டியிலிருந்து எரியோட்டிற்கு பூப்புனித நீராட்டு விழாவிற்கு 407 வாகனத்தின் பின்னால் நின்றுகொண்டு நான் அந்த வாகனத்தில் பயணம் செய்த 40 பேருடன் சென்றுகொண்டிருக்கும்போது தருமத்துப்பட்டி பாலம் அருகில் நாங்கள் சென்ற 407 வாகனம் எதிர் திசையில் வந்த டிராவல்ஸ் வாகனத்தின் மீது மோதிவிட்டது. அதில் எனக்கு இடது முழுங்கையில் காயம் ஏற்பட்டுவிட்டது. இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். என்னுடன் சேர்த்து மொத்தம் 4 பேருக்கு காயம் ஏற்பட்டது. நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். அங்கு உள்நோயாளியாக 6 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் என்னை விசாரித்தார்கள், அதன்பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் வண்டியின் எந்த பகுதியில் உட்கார்ந்து இருந்தீர்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 407 வாகனத்தில் எத்தனை நபர்கள் சென்றீர்கள் என்றால் சுமார் 40 நபர்கள் சென்றோம். 407 வாகனத்தில் மோதிய டிராவல்ஸ் வாகனத்தின் ஓட்டுநரின் பெயர்

விபரம் தெரியாது என்றால் சரிதான். உடனடியாக 407 வாகனத்தை தடைத்திறன் அழுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் உங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor